செ.வெ.எண் : 41/ ஆகஸ்ட் நாள் : 28.08.2021

# இராமநாதபுரம் மாவட்டத்தில் "மக்களைத் தேடி மருத்துவம்" திட்டத்தின் கீழ் இதுவரை 14,648 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டாரம், சாமனப்பள்ளி கிராமத்தில் 2021 ஆகஸ்ட் 5-ம் தேதி **"மக்களை தேடி மருத்துவம்"** என்ற மகத்தான திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் மூலம், பொதுமக்களுக்கு ஒருங்கிணைந்த விரிவான இல்லம் தேடி வரும் மருத்துவ சேவைகள் வாயிலாக நோய் சிகிச்சைக்கான தொடர் கவனிப்பு போன்ற நிலையான மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் தொற்றா நோய்களால் ஏற்படும் உயிரிழப்புகளைத் விர்ப்பதில் உள்ள சவால்களை எதிர்கொள்ள இத்திட்டம் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

ஏற்கனவே பரிசோதனை செய்து பட்டியலிடப்பட்டநோயாளிகளில் 45 வயதும் அதற்கு மேற்பட்டவர்கள் மற்றும் இயலாமையில் உள்ள நபர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் / நீரிழிவு நோய்க்கான மருந்துகளை களப்பணியாளர்கள் இல்லங்களுக்கே சென்று வழங்குதல், நோய் ஆதரவு சேவைகள், இயன்முறை மருத்துவ சேவைகள், சிறுநீரக நோயாளிகளை பராமரித்தல், அத்தியாவசிய மருத்துவ சேவைகளுக்கான பரிந்துரை, குழந்தைகளின் பிறவிக் குறைபாடுகளை கண்டறிந்து தெரிவித்தல் போன்ற ஒரு குடும்பத்திற்கு தேவையான அனைத்து சுகாதார தேவைகளையும் வழங்குவதுடன்,தொடர்ந்து கண்காணித்திடவும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

இத்திட்டத்தின் கள அளவிலான குழுவில்,தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் பயிற்சி பெற்ற பெண் சுகாதாரத் தன்னார்வலர்கள், இடைநிலை சுகாதாரச் சேவையாளர்கள், இயன்முறை மருத்துவர்கள், நோய் ஆதரவுச் செவிலியர் ஆகியோர் இடம் பெற்றுள்ளதோடு, பொதுசுகாதாரதுறையின் களப்பணியாளர்கள் இக்குழுவினரின் செயல்பாடுகளைக் கண்காணித்து வழிநடத்தி வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 18 வயதிற்கு மேல் 9,94,248 நபர்கள் உள்ளனர். அவர்களில் 51,453 தொற்றாநோயாளிகள் அரசு மருத்துமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களின் மூலம் கண்டறியப்பட்டுள்ளனர். அவர்களுக்கு மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் சிகிச்சைஅளிக்கப்பட்டு வருகின்றது. இதுநாள் வரையில் சர்க்கரை நோயாளிகள் 4,352 நபர்களும், உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் 6,670 நபர்களும், உயர் இரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் 2,957 நபர்களும், இயன்முறை சேவைகள் 306 நபர்களுக்கும் மற்றும் இதர மருத்துவ சேவைகள் 363 நபர்களுக்கும், ஆக மொத்தம் 14,648 நபர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

மாவட்டத்தில் மகளிர் திட்ட பயிற்சி நிறுவனத்தின் பயிற்சி பெற்ற பெண் சுகாதார தன்னார்வலர்கள் 112 நபர்கள், இடைநிலை சுகாதார சேவையாளர்கள் 45 நபர்கள், இயன்முறை மருத்துவர்கள் 4 நபர்கள் மற்றும் நோய் ஆதரவு செவிலியர்கள் 4 நபர்கள் இத்திட்டத்தில் பணிசெய்து வருகின்றனர். மேலும் இத்திட்டத்தின் கீழ் தொற்றா நோயால் பாதிக்கப்பட்டு அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனை, அரசு மருத்துவமனைகள், அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் தனியார் மருத்துவமனைகள் போன்ற இடங்களில் சிகிச்சை பெற்று வரும் நபர்களை கண்டறிந்து இத்திட்டத்தில் இணைக்க ஏதுவாக செவிலியர் பயிற்சி பள்ளி மாணவர்கள், தன்னார்வலர்கள் மற்றும் சுகாதார பணியாளர்கள் கொண்டு வீடுவீடாக சென்று கணக்கெடுக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ஜெ.யு.சந்திரகலா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்திமக்கள் தொடர்புஅலுவலகம், இராமநாதபுரம்.**